**அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் கௌரவ விரிவுரையாளர்களை தற்காலிகமாக பணியமர்த்துவதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்**

- அரசு கலை அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் புதியதாக தற்காலிகமாக கௌரவ விரிவுரையாளர்களை நிரப்புவதற்கான பத்திரிக்கைச் செய்தி வெளியிடப்படும்.
- கௌரவ விரிவுரையாளர்களை தற்காலிகமாக நிரப்புவதற்கான அறிவிப்புகள் / விண்ணப்பங்கள் கல்லூரிக் கல்வி இயக்ககத்தால் அறிவிக்கப்படும்.
- இதற்கான விண்ணப்பத்தினை www.tngasa.org என்ற இணயைதளம் வழியாக மட்டுமே விண்ணப்பித்தல் வேண்டும். இது தொடர்பான செய்திகள் அனைத்தும் அரசு கல்லூரிகளில் அறிவிப்புப் பலகையில் தெரிவிக்கப்படும்.
- பாடப்பிரிவு வாரியாக அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்களின் விவரத்தினையும் மாதிரி விண்ணப் படிவத்தையும் www.tngasa.org என்ற இணையதளம் மூலம் அறிவிப்பு செய்யப்பட வேண்டும்.
- இதற்கான விண்ணப்பக் கட்டணம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ரூ.100/-ம் இதர பிரிவினருக்கு ரூ.200/-ம் இணைய வழியில் செலுத்தப்பட வேண்டும்.
- 21.07.2025 முதல் தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து TNGASA இணையவழி வாயிலாக (www.tngasa.org) விண்ணப்பங்கள் 04.08.2025 முடிய பெறப்படும். இணையதளம் 15 நாட்களுக்கு செயல்பாட்டில் இருக்கும்.
- விண்ணப்பதாரர், ஒரு மண்டலத்திற்கு (Region wise) மட்டுமே விண்ணப்பித்தல் வேண்டும். ஒரு மண்டலத்திற்குட்பட்ட 3 மாவட்டங்களை விருப்பப்படி வரிசைப்படுத்தலாம். ஒன்றிற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் ஒருவரிடமிருந்து பெறப்பட்டால் முதலாவதாக பதிவேற்றம் செய்யப்பட்ட விண்ணப்பம் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.
- தகுதியுடையவர்கள் தங்களது பாஸ்போர்ட் அளவில் உள்ள புகைப்படத்துடன் முதுகலை / முனைவர் /SET/SLET/NET/ NET-JRF ஆகிய சான்றிதழ்கள் மற்றும் விண்ணப்பத்தில் கோரப்பட்டுள்ள சான்றிதழ்களின் நகல்களுடன்

www.tngasa.org என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்து விண்ணப்பிக்க வேண்டும்.

- இணையவழி வாயிலாக பெறப்பட்ட விண்ணப்பங்கள் TNGASA–வினால் தரவரிசைப் பட்டியல் பாடப்பிரிவுகள் வாரியாக கல்வித்தகுதி மதிப்பெண் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு மண்டல வாரியாக சார்ந்த மண்டலங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.
- வயது வரம்பு: 01.07.2025 அன்று உச்சபட்ச வயது வரம்பு 57 ஆக இருத்தல் வேண்டும்.
- குறைந்தபட்ச கல்வித்தகுதி முதுநிலை பட்டத்தில் குறைந்தபட்ச மதிப்பெண் 55% பெற்றிருக்க வேண்டும். ஆதிதிராவிடர் / ஆதிதிராவிட பழங்குடியினர் / பிற்படுத்தப்பட்டோர் / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / மாற்றத்திறனாளி பிரிவினர் ஆகியோர் 50% மதிப்பெண் பெற்றிருத்தல் போதுமானது. உடன், பி.எச்டி அல்லது NET / SLET / SET ஏதேனும் ஒரு தகுதியைப் பெற்றிருத்தல் அவசியம்.
- கௌரவ விரிவுரையாளர்கள் தங்களின் கல்வித் தகுதியின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு கல்வியில் மதிப்பீடு 85 மதிப்பெண்கள் மற்றும் நேர்முகத் தேர்வு மூலம் 15 மதிப்பெண்கள் ஆகியவற்றில் அதிகபட்ச மொத்த மதிப்பெண்கள் 100–ன் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். மேலும் அரசின் வழக்கமான இட ஒதுக்கீட்டு முறை பின்பற்றப்படும்.

| பாடப்பிரிவு வாரியான கல்வித் தகுதியின் அடிப்படையில் மதிப்பெண் பகிர்வு | | நேர்முகத் தேர்விற்கான மதிப்பெண் பகிர்வு | |
|---|---|---|---|
| கல்வித்தகுதி | அதிகபட்ச மதிப்பெண்கள் | கூறுகள் | அதிகபட்ச மதிப்பெண்கள் |
| பி.எச்.டி மற்றும் NET & JRF | 85 | பாடப்பிரிவு புலமை (Subject Knowledge) | 5 |
| பி.எச்.டி மற்றும் NET | 83 | மொழித் தொடர்புத் திறன் (Communication skills) | 5 |
| பி.எச்.டி மற்றும் SET/ SLET | 81 | ஆளுமைப் பண்புகள் (Personality Traits) | 5 |
| பி.எச்.டி | 79 | | |

| | | | |
|---|---|---|---|
| முதுநிலை பட்டம் மற்றும் NET & JRF | 77 | | |
| முதுநிலை பட்டம் மற்றும் NET | 75 | | |
| முதுநிலை பட்டம் மற்றும் SET/ SLET | 73 | | |

- தற்காலிகமாக பணியமர்த்தப்படும் கௌரவ விரிவுரையாளர்களுக்கு அந்த கல்வியாண்டிற்கு மட்டும் 11 மாதங்களுக்கு தற்காலிகமாக பணியமர்த்தப்படுகிறார்கள் என்றும் அவர்களுக்கு மாதாந்திர தொகுப்பூதியம் ரூ.25000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட வேண்டும்.
- மண்டல வாரியாக தெரிவுக்குழு கீழ்க்காணும் உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்படும்.

| குழுத் தலைவர் | உறுப்பினர்கள் | பாடவல்லுநர்கள் |
|---|---|---|
| மண்டல இணை இயக்குநர் | 1. முதல்வர்- நிலை I | பாடவல்லுநர் - 1 (இணைப்பேராசிரியர் நிலைக்கு குறையாமல் இருத்தல்வேண்டும்) |
| | 2. பட்டியல் இனத்தைச் சார்ந்த முதல்வர் (நிலை I அல்லது நிலை II) அல்லது மூத்த இணைப்பேராசிரியர் | பாடவல்லுநர் - 2 (இணைப்பேராசிரியர் நிலைக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்) |

- கல்வித்தகுதிக்கான மதிப்பெண் அடிப்படையில் ஒவ்வொரு மண்டலத்திற்கும் உரிய தரவரிசைப் பட்டியலை பாடவாரியாக ஒன்றுக்கு மூன்று (1:3) என்ற விகிதத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நேர்காணலுக்கான அழைப்புக் கடிதம் மின்னஞ்சல் வாயிலாகவும் அனுப்பப்பட்டு TNGASA இணையதளத்தின் மூலமும் வெளியிடப்படும்.

- தெரிவு செய்யப்பட்டவர்கள் இணையதளத்தில் விண்ணப்பித்த அனைத்து அசல் கல்விச் சான்றிதழ்களுடன் சார்ந்த மண்டலங்களிலுள்ள மையங்களுக்கு நேர்காணலுக்கு வரவேண்டும்.

- தெரிவுக்குழுவினரால் நேர்காணலில் வழங்கப்பட்ட மதிப்பெண்களுடன், கல்வித் தகுதிக்கான மதிப்பெண்களும் சேர்த்து மொத்த மதிப்பெண்களின் அடிப்படையில் இறுதி தெரிவுப் பட்டியல் பாடப்பிரிவுகள் வாரியாகத் தயாரிக்கப்படும். காத்திருப்போர் பட்டியலும் பாடப்பிரிவுகள் வாரியாக தயாரிக்கப்பட்டு தெரிவுக்குழுவினரின் கையொப்பத்துடன் TNGASA இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.

- ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்கள் ஒரே மதிப்பெண் பெற்றிருந்தால் அவர்களுடைய பிறந்த தேதியின் அடிப்படையிலும், அவையும் ஒத்திருப்பின் பதிவு எண் அடிப்படையிலும் முன்னுரிமை வழங்கப்படும்

- தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு சார்ந்த மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்களால் TNGASA இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யப்படும் தெரிவுக் கடிதத்தினை விண்ணப்பதாரர்கள் தங்களுடைய உள்நுழைவு பயனாளர் குறியீட்டினைப் பயன்படுத்தி (Login ID) பதிவிறக்கம் செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

- தெரிவு செய்யப்பட்ட நபர்கள் 5 வேலை நாட்களுக்குள் சார்ந்த கல்லூரிகளில் பணியில் சேரவேண்டும். அவ்வாறு பணியில் சேரவில்லை என்றால் தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்கான தெரிவு ஆணை ரத்து செய்யப்பட்டு, அக்காலிப் பணியிடத்தில் காத்திருப்போர் பட்டியலிருந்து விதிமுறைகளின்படி தெரிவு மேற்கொள்ளப்படும்.

- தற்காலிகமாக பணியமர்த்தப்படும் கௌரவ விரிவுரையாளர்கள் தொகுப்பூதிய அடிப்படையில் நடப்பு கல்வி ஆண்டின் இறுதி நாளான 30 ஏப்ரல் வரை பணியமர்த்தப்படுவர்.

- தற்காலிகமாக பணியமர்த்தப்படும் கௌரவ விரிவுரையாளர்கள் முறையாக நியமனம் செய்யப்படும் உதவிப் பேராசிரியர்கள் பணியேற்கும் நாள் அன்றோ அல்லது இடமாறுதல் மூலம் அப்பணியிடம் நிரப்பப்பட்டாலோ இவற்றில் எது முன்னர் நிகழ்கிறதோ அன்று தற்காலிக கௌரவ விரிவுரையாளர்கள்

பணிவிடுப்பு செய்யப்படுவார்கள் என்ற விவரத்தினை பணியமர்த்தப்படும் நாளன்றே கௌரவ விரிவுரையாளர்களிடம் தெரிவிக்கப்பட வேண்டும்.

- தற்காலிக கௌரவ விரிவுரையாளர்களை பணியமர்த்துகையில் மேற்கூறப்பட்ட நெறிமுறைகள் தவறாது கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்றும் எவ்வித புகாருக்கும் இடமளிக்காமல் அவர்கள் பணியமர்த்தப்பட வேண்டுமென்றும் சார்ந்த மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். கௌரவ விரிவுரையாளர்களைப் பணியமர்த்துவதில் ஏதேனும் தவறுகள் ஏற்படின், தொடர்புடைய மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநரே பொறுப்பாவார் என்பதால் கவனமுடன் பணியமர்த்துமாறு தெரிவிக்கலாகிறது.

- நிர்வாக நலன் கருதி பணியமர்த்தப்படும் கௌரவ விரிவுரையாளர்கள் ஏதேனும் பிரச்சனை ஏற்படின் உரிய விசாரணைக்குழு பரிந்துரையின் அடிப்படையில் அவசியம் எனில் பணியிலிருந்து விடுவிக்க சார்ந்த கல்லூரி முதல்வருக்கு அதிகாரம் உண்டு எனத் தெரிவிக்கலாகிறது.